குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.129/2012

அ.சா.4

2025–ம் ஆண்டு ஆகஸ்ட் 04–ம் தேதி திங்கள்கிழைமை அரசு தரப்பு சாட்சி 04–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.மோகனபிரியா என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கிருஷ்ணமூர்த்தி | தொழில் | |
| தந்தை பெயர் | நாகராஜ் | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 11.58 மணி,

Accused Panneer selvam present. Advocate Mr.Siddharthasankar present for Advocate Mr.Sreenivasan for accused. APP Mr.M.Suresh present.

**முதல் விசாரணை :**

1. நான் காவேரிபட்டினத்தில் குடியிருந்து, ஓட்டுநர் வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கு சம்பவ காலத்தில், கல்லடா டிராவல்ஸ் என்ற நிறுவனத்தில் ஓட்டுநராக வேலை செய்து வந்தேன். சுமார் 10 வருடங்களுக்கு முன்பு, திருவனந்தபுரத்தில் இருந்து, பெங்களூரு செல்லும் கல்லடா டிராவல்ஸ் பேருந்தை இரவு 08.00 மணியளவில் திருவனந்தபுரத்தில் இருந்து புறப்பட்டு, பெங்களூரு நோக்கி வந்து கொண்டிருந்தோம்.

2. பின்பு, நாகர்கோவிலில் நிறுத்தி, இரண்டு பயணிகளை ஏற்றிக்கொண்டு, பெங்களூரு நோக்கி வந்து கொண்டிருந்தோம். பேருந்தில் மொத்தம் 48 பயணிகள் பயணம் செய்தார்கள். பரமத்தி வேலூர் அருகே வந்துகொண்டிருந்தபோது, பேருந்தில் பயணம் செய்த பயணி ஒருவர் இரண்டு கிலோ தங்கம் எடுத்து வந்ததாகவும், அதனை காணவில்லை என்றும், அருகில் உள்ள காவல் நிலையத்தில் நிறுத்துமாறு சொன்னார்.

3. நான், ஓமலூர் காவல் நிலையத்தில், பேருந்தை நிறுத்தினேன். அதன்பின்பு, போலிசார் பேருந்தில் உள்ள அனைவரையும் விசாரணை செய்தார்கள். தங்கம்

S SHARMILA
Digitally signed by S SHARMILA
Date: 2025.08.04 17:51:33 +0530

தொலைந்து போனது குறித்து விசாரணை செய்து கண்டுபிடிப்பதாக கூறி எங்களை அனுப்பி விட்டார்கள்.

4. தங்கம் தொலைந்ததாக கூறிய நபர் திருவனந்தபுரத்தில் இருந்து சேலம் வருவதற்காக பயணம் செய்தார். பேருந்து திருவனந்தபுரத்தில் பயணிகளை ஏற்றிக்கொண்டு கிளம்பிய பின்பு, நாகர்கோயிலில் மட்டும் தான் பயணிகளை ஏற்றுவதற்காக நிறுத்தினேன். அதன்பின்பு, ஓமலூர் காவல் நிலையத்தில் பேருந்தை நிறுத்தும் வரை, வேறு எங்கும் பயணிகளை ஏற்றி, இறக்குவதற்கு பேருந்தை நிறுத்தவில்லை.

5. மேற்படி பேருந்தில், முன் பக்கம் ஒரு படிக்கட்டு உள்ளது. அதன் கண்ணாடி கதவு நான் திறந்தால் மட்டுமே திறக்கும். நான், நாகர்கோயிலில் பயணிகளை ஏற்றிக்கொண்டு, கிளம்பிய பின்பு, கண்ணாடி கதவை மூடிவிட்டேன். பேருந்தில், திறக்கும் வகையில் ஓட்டுநர் இருக்கை அருகே உள்ள கதவை தவிர, வேறு எந்த கதவும் இல்லை. 2 நாட்கள் கழித்து போலிசார் மீண்டும் என்னை விசாரணைக்கு வரச்சொன்னார்கள்.

6. அப்போது, மேற்படி தங்கம் தொலைந்ததாக கூறிய நபரே தங்கத்தை எடுத்ததாக ஒத்துக்கொண்டதாக போலிசார் சொன்னார்கள். மேற்படி சம்பவம் நடந்தபோது, பேருந்தில் பசவராஜ் என்பவர் கிளீனராக இருந்தார். அவர், திருவனந்தபுரத்தில் இருந்து புறப்பட்ட சமயத்தில் இருந்து, பேருந்தில் பணியில் இருந்தார். வேல்முருகன் என்பவர் எங்கள் பேருந்தின் மாற்று ஓட்டுநர் ஆவார். அவர், டியுட்டி மாற்றுவதற்காக சேலத்தில், பேருந்தில் ஏறினார்.

7. லோகநாதன் என்பவரும் எங்கள் நிறுவனத்தில் பணிபுரியும் ஓட்டுநர் ஆவார். ஓமலூர் காவல் நிலையத்திற்கு செல்வதற்கு வழி காட்டுவதற்காக சேலத்தில் இருந்து அவரும் உடன் வந்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

8. நான், சம்பவத்தின்போது, கல்லடா டிராவல்ஸ்–ல் பணிபுரிந்ததற்கான ஆவணங்கள் ஏதும் போலிசாரிடம் ஒப்படைத்தேனா என்றால், இல்லை. சம்பவத்தன்று

S SHARMILA
Digitally signed by S SHARMILA
Date: 2025.08.04 17:51:38 +0530

சுமார் 48 நபர்கள் பேருந்தில் பயணித்தார்கள். நான், திருவனந்தபுரத்தில் இருந்து புறப்பட்ட பின்பு, நாகர்கோயிலில் ஒரு முறை வாகனத்தை நிறுத்தினேன். பின்பு, சேலம் வழியாக தான் பெங்களூரு நோக்கி சென்றேன் என்றால் சரி.

9. நான், முதல் விசாரணையில் எங்கள் நிறுவனத்தில் பணிபுரியும் லோகநாதன் என்பவரை ஓமலூர் காவல் நிலையத்திற்கு செல்வதற்கு வழி காட்டுவதற்காக சேலத்தில் இருந்து பேருந்தில் ஏற்றி வந்தேன் என்றால் இல்லை. லோகநாதன் இருசக்கர வாகனத்தில் வந்தார். நான், லோகநாதனுக்கு காலை 05.00 – 06.00 மணியளவில் போன் மூலம் தகவல் சொன்னேன்.

10. நான், சேலத்தில் வாகனத்தை நிறுத்திவிட்டு சுமார் 03.30 – 04.00 மணியளவில் பள்ளப்பட்டி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். புகாரை யார் எழுதினார்கள் என்றால் நினைவில் இல்லை. நான் பள்ளப்பட்டி காவல் நிலையத்தில் சுமார் அரை மணிநேரம் காத்திருந்தேன். அவர்கள் என்னை ஓமலூர் காவல் நிலையத்தில் புகார் கொடுக்க சொன்னார்கள். பள்ளப்பட்டி காவல் நிலையத்தில் உள்ள எந்த காவலர் என்னை ஓமலூர் காவல் நிலையத்தில் புகார் கொடுக்க சொன்னார்கள் என்று தற்போது நினைவில் இல்லை.

11. சம்பவத்தன்று எங்களது கல்லடா நிறுவனத்தில் பேருந்தில் 48 பயணிகள் பயணித்ததற்கான பயணச்சீட்டையோ அல்லது ரசீதையோ போலிசாரிடம் ஒப்படைத்துள்ளேனா என்றால் இல்லை. நான், பள்ளப்பட்டி காவல் நிலையத்திலிருந்து சுமார் 05.30 – 06.00 மணிக்கு ஓமலூர் காவல் நிலையம் வந்தேன். சம்பவம் நடந்து 15 வருடங்கள் ஆகிவிட்டதால் தற்போது நேரம் சரிவர நினைவில்லை. ஓமலூர் காவல் நிலையத்தில் நான் தான் புகார் எழுதிக்கொடுத்தேன்.

12. மேற்படி புகார் தமிழில் எழுதப்பட்டிருந்ததா அல்லது ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்ததா என்று எனக்கு நினைவில்லை. எதிரி இரண்டு கிலோ தங்கம் தொலைந்துவிட்டதாக என்னிடம் கூறினார் என்று நான் சொல்லியுள்ள நிலையில், மேற்படி எதிரி எங்கு பணிபுரிந்து வந்தார் என்றும், அந்த தங்கம் யாருடையது என்றும் கேட்டு தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை.

13. நான் ஓமலூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துவிட்டு, சுமார் 07.00 மணியளவில் ஓமலூரிலிருந்து சென்றேன். பொதுவாக திருவனந்தபுரத்தில் இருந்து,

S SHARMILA Digitally signed by S SHARMILA Date: 2025.08.04 17:51:42 +0530

பெங்களுரூ செல்ல வேண்டிய கல்லடா வாகனத்தில் ஒரு ஓட்டுநர் மற்றும் ஒரு கிளீனர் வருவோம். சேலம் வந்த பின்பு, மாற்று ஓட்டுநர் பேருந்தில் வருவார். சம்பவத்தன்று, ஓமலூரிலிருந்து வேல்முருகன் தான் வாகனத்தை பெங்களூருக்கு ஓட்டிச்சென்றார்.

**மறுவிசாரணை : இல்லை**

**விசாரணை முடிந்த நேரம் : மதியம் 12.25 மணி.**

S SHARMILA

Digitally signed by S SHARMILA
Date: 2025.08.04 17:51:46 +0530